வரும் 2 ஆம் தேதி கூட நாம் விடுமுறை அளித்திருக்கிறோம். இந்த நிலையில் இந்த மாதச் சம்பளம், மாநில அரசு ஊழியர்களுக்கு எப்போதும் தருவது போல இந்த மாதமே வழங்கப்படாமல், ஏப்ரல் 4 ஆம் தேதி வழங்கப்பட இருப்பதாகச் சொன்னார்கள். பண்டிகையினை முன்னிட்டு மார்ச் 31 ஆம் தேதியே சம்பளம் கொடுத்தால் வசதியாக இருக்கும்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதியாண்டின் இறுதி மார்ச் 31 ஆம் தேதி, சம்பளம் கொடுக்க முடியாது. மார்ச் மாதமே கொடுத்தால் இவ்வாண்டு அவர்களுக்கு 13 மாத சம்பளம் என்றாகி நட்டம் தான் வரும். ஏப்ரல் மாதம் சம்பளம் வாங்கினால்தான் வேலையில் உள்ளவர்களுக்கு லாபம். இதெல்லாம் நிர்வாகப் பிரச்னை. நீங்கள் மீனவர்கள் சப்ஜெக்ட்டிலே தான் அத்தாரிட்டி ; உட்காருங்கள்.

(ஆ) உறுப்பினர் பழைய விடுதியில் கொசுத் தொல்லை.

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய சட்டசபை விடுதியிலே கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. அதை தங்களின் கவனத்திற்குக்கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடிந்தால் நான் வந்து விரட்டப் பார்க்கிறேன்.

(இ) பேசின்பிரிட்ஜ் அனல்மின் நிலையம் குறித்து.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலுள்ள, பேசின் பிரிட்ஜிலே இருக்கிற ஒரு அனல் மின் நிலையத்தை மூடிவிடப் போவதாகவும், அங்குள்ள தொழிலாளர்கள் எல்லாம் வெளியேற்றப்படப் போவதாகவும் தொழிலாளர்கள் மத்தியிலே ஒரு . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூடியபிறகு எழுதிக் கொடுங்கள், வேண்டுமானால் ஒத்திவைப்புத் தீர்மானமாக கொண்டு வரலாம். இன்றைக்கு வேறு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

மதுரை திருச்சி சிறைகளிலுள்ள கைதிகளின் உண்ணா நோன்பு போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், ரா. உமாநாத், ஜே. ஹேமச்சந்திரன், எம். செல்லமுத்து, டி. மணி, என். பழனிவேல், கே. ஆர். சுந்தரம்,